NDB வங்கி
எதிர்கால வங்கியியல் முன்னோடி

மொபைல் / இணைய வங்கித்தொழில் - நியதிகள் மற்றும் நிபந்தனைகள்

1. வரைவிலக்கணங்கள்:-

1.1 "கணக்கு (கணக்குகள்)" என்பது, மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவைகளினூடான தொழிற்பாடுகளுக்கு தகைமையுடைய கணக்காக (கணக்குகளாக) உள்ள வாடிக்கையாளரின் வங்கிக் கணக்கு (கணக்குகள்) அத்துடன்/ அல்லது கடன் அட்டைக் கணக்கு அத்துடன்/ அல்லது வேறு ஏதேனும் வகையான கணக்கு (கணக்குகள்) எனப் பொருள்படும்.

1.2 "வங்கி" என்பது, நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி, அதன் அடுத்துறுநர்கள் மற்றும் சாட்டுநர்கள் எனப் பொருள்படுதல் வேண்டும்.

1.3 "மொபைல் பேங்கிங்" என்பது, காலத்துக்குக்காலம் வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்துவதன் மூலம் ஏதேனும் கைபேசிச் சாதனத்தினூடாக வங்கித்தொழில் கொடுக்கல்வாங்கல்களை மெய்யென உறுதிப்படுத்துதல் அத்துடன் / அல்லது அக்கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுதல் எனப் பொருள்படுதல் வேண்டும். இது NEOS Pay வசதி மற்றும் NEOS கணக்குத் திறத்தல் வசதி ஆகியவற்றை உள்ளடக்கும்.

1.4 "மொபைல் பேங்கிங் செயலி" என்பது, கைபேசிச் சாதனமொன்றின் ஊடாக கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் நோக்கத்துக்காக வங்கியினால் கிடைக்கக்கூடியதாக்கப்படும் ஒரு செயலி எனப் பொருள்படுதல் வேண்டும்.

1.5 "மொபைல் பேங்கிங் செயலி பயோமெட்ரிக் மூலமான பதிகை புகுதல் சேவை" என்பது, வங்கியின் மொபைல் பேங்கிங் செலியை அணுகுவதற்கு வாடிக்கையாளரின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு வங்கியினால் தோற்றுவிக்கப்படும் இணைய / மொபைல் பேங்கிங் கடவுச்சொல்லுக்குப் பதிலாக பாதுகாப்புக் குறியீடொன்றாக அனுமதிக்கப்பட்ட கைபேசிச் சாதனமொன்றில் பதிவுசெய்யப்பட்ட வாடிக்கையாளரின் முக அடையாளம் அல்லது விரல் பதிவை வாடிக்கையாளர் பயன்படுத்த முடியுமாக இருக்கின்ற ஒரு சேவை எனப் பொருள்படுதல் வேண்டும்.

1.6 "NEOS Pay வசதி" என்பது, மொபைல் பேங்கிங் செயலியில் பதிவுசெய்வதன் மூலம் Just Pay வசதியினூடாக வணிகர் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு வாடிக்கையாளர்களினால் பயன்படுத்த முடியுமான QR குறியீட்டு அடிப்படையிலான ஒரு கொடுப்பனவுத் தீர்வு எனப் பொருள்படுதல் வேண்டும்.

1.7 "இணைய வங்கித்தொழில்" என்பது, https://www.neosonline.ndbbank.com/ என்ற இணையத்தள முகவரியினூடாக இணைய உலாவியொன்றின் (web browser) மூலம் வங்கித்தொழில் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுதல் எனப் பொருள்படுதல் வேண்டும்.

1.8 "NEOS கணக்கு திறத்தல் வசதி" என்பது, வங்கியின் மொபைல் பேங்கிங் செயலி அல்லது இணைய வங்கித்தொழில் சேவையினூடாக வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்படுகின்ற கோரிக்கைகளின்

அடிப்படையில் காலத்துக்குக்காலம் வங்கியினால் அனுமதிக்கப்படக்கூடியவாறாக நிலையான வைப்புக் கணக்குகள் மற்றும் அத்தகைய வேறு கணக்குகளைத் திறத்தல் எனப் பொருள்படுதல் வேண்டும்.

1.9 ''பயோமெட்ரிக்ஸ்'' என்பது, வாடிக்கையாளர் மொபைல் பேங்கிங் செயலிக்குப் பதிகை புகும் (Login) நேரத்தில் தனது விருப்பத்தெரிவில் பயன்படுத்தக்கூடிய முக அடையாளம் மற்றும் விரல் பதிவு அடையாளம் எனப் பொருள்படுதல் வேண்டும்.

1.10 ''வாடிக்கையாளர்'' என்பது, கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கு வங்கியினால் வழங்கப்படும் மொபைல் பேங்கிங் அத்துடன்/ அல்லது இணைய வங்கித்தொழில் சேவைகளைப் பயன்படுத்தும் ஒரு தனிநபர் எனப் பொருள்படுதல் வேண்டும்.

1.11 ''Just Pay வசதி'' என்பது, வாடிக்கையாளர்கள் ஸ்மார்ட் கைபேசிச் சாதனங்களைப் பயன்படுத்தி தமது நடைமுறை அல்லது சேமிப்புக் கணக்கிலிருந்து வணிகர் ஒருவரின் கணக்கிற்கு நேரடியாக நிதிகளைப் பரிமாற்றுவதன் மூலம் சில்லறைக் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு அவர்களுக்கு வசதியளிக்கின்ற லங்கா பே இன் ஒரு கொடுப்பனவு வசதி எனப் பொருள்படுதல் வேண்டும்.

1.12 ''லங்கா பே'' என்பது, இலங்கை மத்திய வங்கியினால் வழிகாட்டப்படும் இலங்கையின் தேசிய கொடுப்பனவு வலையமைப்பு எனப் பொருள்படுதல் வேண்டும்.

1.13 ''வணிகர்'' என்பது, வியாபாரத்தில அல்லது வர்த்தகத்தில் சம்பந்தப்பட்டுள்ள எவரேனும் நபர் எனப் பொருள்படுதல் வேண்டும்.

1.14 "OTP" என்பது, வங்கியினால் தோற்றுவிக்கப்படும் ஒரு முறை மாத்திரமான கடவுச்சொல் (OTP) எனப் பொருள்படுதல் வேண்டும்.

1.15 ''கடவுச்சொல்'' என்பது, பதிவுசெய்யும் நேரத்தில் வாடிக்கையாளரினால் தொடக்கத்தில் உள்ளிடப்படும் அல்லது வாடிக்கையாளரினால் அடுத்துப் பின்னர் உருவாக்கப்படும் கடவுச் சொல் எனப் பொருள்படுதல் வேண்டும்.

1.16 ''யாருக்காவது செலுத்துங்கள் (Pay Someone)'' என்பது, வாடிக்கையாளர் ஒருவர் கணக்கிலக்கத்துக்குப் பதிலாக பயனுகரியின் பதிவுசெய்யப்பட்ட கையடக்கத்தொலைபேசி இலக்கத்தை உள்ளிடுதல் அல்லது பயனுகரியின் QR குறியீட்டை ஸ்கான் செய்தல் என்ற வகையாக வேறு ஒரு வாடிக்கையாளருக்கு நிதிகளைப் பரிமாற்றுவதற்கு மொபைல் பேங்கிங் செயலியில் அல்லது இணைய வங்கித்தொழில் சேவையினூடாக வழங்கப்படும் ஒரு தொழிற்பாடு எனப் பொருள்படுதல் வேண்டும்.

1.17 ''கையடக்கத் தொலைபேசி இலக்கத்துக்கு செலுத்துங்கள் (Pay to Mobile)'' என்பது, வாடிக்கையாளர் ஒருவர் கணக்கிலக்கத்துக்குப் பதிலாக பயனுகரியின் பதிவுசெய்யப்பட்ட கையடக்கத்தொலைபேசி இலக்கத்தை உள்ளிடுதல் என்ற வகையாக வேறு ஒரு வாடிக்கையாளருக்கு நிதிகளைப் பரிமாற்றுவதற்கு இணைய வங்கித்தொழில் சேவையினூடாக வழங்கப்படும் ஒரு தொழிற்பாடு எனப் பொருள்படுதல் வேண்டும்.

1.18 "QR குறியீடு" என்பது, விரைவான பதில் குறியீடு எனப் பொருள்படுதல் வேண்டும்.

1.19 "எழுமாற்று எண்" என்பது, NEOS Pay வசதிக்காக மொபைல் பேங்கிங் செயலியில் பதிவுசெய்யும் நோக்கத்துக்காக வாடிக்கையாளரைச் சரிபார்ப்பதற்கு பயன்படுத்தப்படுகின்ற, வேறு ஏதேனும் நிதி நிறுவனத்துடன் வாடிக்கையாளர் பதிவுசெய்துள்ள கையடக்கத் தொலைபேசி இலக்கத்துக்கு அத்தகைய வேறு நிதி நிறுவனத்தினால் SMS ஒன்றின் ஊடாக அனுப்பப்படுகின்ற ஒரு எழுமாற்று பணப் பெறுமதி எனப் பொருள்படுதல் வேண்டும்.

1.20 "சேவை வழங்குநர்" என்பது, தொலைத்தொடர்பாடல் வழங்குநர்கள், காப்புறுதிக் கம்பெனிகள், நீர்வழங்கல் கம்பெனிகள் மற்றும் மின்சார விநியோகக் கம்பெனிகள் முதலியன போன்ற எவரேனும் மூன்றாம் திறத்தவரான பயன்பாட்டு வழங்குநர் எனப் பொருள்படுதல் வேண்டும்.

1.21 "பயனர் ID" என்பது, வாடிக்கையாளரின் தனித்துவமான பயனர் டையாளம் எனப் பொருள்படும்.

2. பதிவு

2.1 வாடிக்கையாளரினால் அவரது கைபேசிச் சாதனத்தினூடாக மொபைல் பேங்கிங் செயலி பதிவிறக்கம் செய்யப்படுவதன்மேல், அல்லது இணைய உலாவி ஒன்றின் மூலம் இணைய வங்கித்தொழில் இணையத்தள முகவரியை அணுகுவதன் மூலம், பின்வரும் முறைகளுள் ஒன்றின் மூலம் மொபைல் பேங்கிங் அத்துடன்/ அல்லது இணைய வங்கித்தொழில் சேவைகளுக்கு வாடிக்கையாளர் பதிவுசெய்யலாம். தற்போதைய ஒழுங்குபடுத்தும் தேவைப்பாடுகளின்படி, மொபைல் பேங்கிங் செயலியை பதிவிறக்கம் செய்து தொழிற்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் கைபேசிச் சாதனம் பற்றிய விபரங்கள், மொபைல் பேங்கிங் செயலியைப் பயன்படுத்துவதற்காக அவரது வாடிக்கையாளர் விபரக்குறிப்பு அல்லது பயனர் ID இன் கீழ் தன்னிச்சையாகப் பதிவுசெய்யப்படுதல் வேண்டும் என வாடிக்கையாளர் இத்தால் ஒப்புக்கொள்கின்றார். அத்தகையதாக, மொபைல் பேங்கிங் செயலியானது பதிவுசெய்யப்படாத கைபேசிச் சாதனமொன்றிலிருந்து பயன்படுத்தப்படமுடியாது. எனவே, வாடிக்கையாளர் பின்வரும் முறைகள் மூலம் மொபைல் பேங்கிங் சேவைக்கு பதிவுசெய்துகொள்ள முடியும்:

(i) டெபிட் / கடன் அட்டை பற்றிய விபரங்கள் மற்றும் PIN இலக்கத்தை உள்ளிடுவதன் மூலம்

(ii) பதிவிறக்கம் செய்யப்பட்ட மொபைல் பேங்கிங் செயலியில் Just Pay வசதி இயலுமாக்கப்பட்டுள்ள, ஒன்றில் வங்கியில் அல்லது ஏதேனும் நிதி நிறுவனத்தில் பேணப்படும் ஏதேனும் கணக்கின் தனது தெரிவுசெய்யப்பட்ட கணக்கு இலக்கத்தை உள்ளிடுவதன் மூலம்.

OTP ஒன்று வங்கியின் வாடிக்கையாளரின் கையடக்கத் தொலைபேசி இலக்கத்துக்கு தோற்றுவிக்கப்படும் என்பதுடன் வேறு நிதி நிறுவனங்களின் வாடிக்கையாளர்களின் விடயத்தில் ஒரு எழுமாற்று எண் தோற்றுவிக்கப்படும். சொல்லப்பட்ட OTP அல்லது எழுமாற்று எண்ணை உள்ளிடுவதன் மேல், வாடிக்கையாளர் மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவைகளுக்குப் பதிவுசெய்யலாம். (ஐயத்தைத் தவிர்ப்பதற்காக சொல்லப்பட்ட OTP வங்கியில் பதிவுசெய்யப்படுகின்ற

கையடக்கத் தொலைபேசி இலக்கத்துக்கு தோற்றுவிக்கப்படும் என்பதுடன் ஒரு எழுமாற்று எண் வேறு நிதி நிறுவனங்களில் பேணப்படும் கணக்குகளுக்குத் தோற்றுவிக்கப்படும்)

வேறு நிதி நிறுவனங்களில் தன்னால் பேணப்படும் கணக்குகளுக்கு பதிவுசெய்வதற்கென எழுமாற்று எண்ணை சரியாக உள்ளீடு செய்வதற்கு வாடிக்கையாளர் பொறுப்பாதல் வேண்டும் என வாடிக்கையாளர் உடன்படுகின்றார்.

3. மொபைல் பேங்கிங் மூலமான கொடுக்கல்வாங்கல் பற்றிய அறிவுறுத்தல்கள் மற்றும் செய்திகள்

3.1 மொபைல் பேங்கிங் செயலிக்கான பதிகை புகுதலானது (Login) ஒன்றில் கடவுச்சொல்லை உள்ளிடுதல் அல்லது பயோமெட்ரிக்ஸ் முறை என்ற வகையாக அனுமதிக்கப்படுகின்றது; வாடிக்கையாளர் தனது சொந்தத் தற்றுணிபில் அதனைத் தீர்மானிக்கலாம். இணைய வங்கித்தொழில் சேவைக்கான பதிகை புகுதல் (Login) ஆனது பயனர் ID மற்றும் கடவுச்சொல்லை உள்ளிடுவதன் மூலம் அனுமதிக்கப்படுகின்றது.

3.2 மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவை ஊடாக வாடிக்கையாளரிடமிருந்து வருவதாகக் கொள்ளப்படுகின்றனவும் வங்கியினால் பெறப்படுகின்றனவுமான எல்லா அறிவுறுத்தல்களையும் அல்லது செய்திகளையும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது அவற்றின் மீது செயலாற்றுவதற்கு வாடிக்கையாளர் இத்தால் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார்.

3.3 எவரேனும் மூன்றாம் திறத்தவரான சேவை வழங்குநருடன் கொடுக்கல்வாங்கல் ஒன்றைச் செய்முறைப்படுத்துவதற்கு தேவைப்படுத்தப்படுகின்ற வாடிக்கையாளரின் விபரங்களைப் பகிர்வதற்கு வாடிக்கையாளர் இத்தால் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார்.

3.4 வங்கியானது எச்சந்தர்ப்பத்திலும் வாடிக்கையாளரின் பயனர் ID அல்லது கடவுச்சொல்லை அறிவிப்பதற்கு அல்லது கோருவதற்கு மின்னஞ்சல் மூலமான கடிதத்தொடர்பை பயன்படுத்தாது என வாடிக்கையாளர் இத்தால் விளங்கிக்கொள்கின்றார்.

3.5 வாடிக்கையாளர், மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவைகளுக்கான பதிவுக்காகவும் மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவை ஊடாக கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்காகவும் அல்லது அவை தொடர்பில் செம்மையானதும் பூரணமானதுமான தகவல்களை வங்கிக்கு வழங்குவதற்கு பொறுப்பேற்றல் வேண்டும். வாடிக்கையாளர் தன்னால் அவதானிக்கப்படும் ஏதேனும் பிழை, ஒவ்வாமை அல்லது விட்டுவிடுகை பற்றி உடனடியாக வங்கியின் கவனத்திற்குக் கொண்டுவருதல் வேண்டும்.

3.6 வாடிக்கையாளர், மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவை ஊடாக பரிமாறப்படும் இலத்திரனியல் செய்திகளை முடிவானதும் வாடிக்கையாளரின் மீது பிணிக்கப்பட்டதுமானதாக ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

3.7 எவ்வகையில் பயனுறுத்தப்படினும் மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவையைப் பயன்படுத்தி செய்முறைப்படுத்தப்படும் அல்லது பயனுறுத்தப்படும் எல்லாக்

கொடுக்கல்வாங்கல்களுக்குமான / கோரிக்கைகளுக்குமான முழுப் பொறுப்பை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

3.8 மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவைகளுக்காக பதிவுசெய்வதன் மேல், வாடிக்கையாளரினால் பேணப்படும் எல்லாக் கணக்குகளும் மொபைல் பேங்கிங் செயலி அத்துடன் / அல்லது இணைய வங்கித் தொழில் சேவைக்கு தொடுக்கப்படும் என அவர் ஒப்புக்கொள்கின்றார். ஆயின் எவ்வாறாயினும் கூட்டுக்கணக்குகள் விடயத்தில் வாடிக்கையாளர் கூட்டுக்கணக்கு வைத்திருப்பவர் ஒருவராக இருக்கின்றவிடத்து, மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவையினூடான கொடுக்கல்வாங்கல்கள் "எவரும் உள்நுழையலாம்" என்ற தொழிற்பாட்டு அறிவுறுத்தலைக் கொண்ட கணக்குகளுக்கு மட்டும் மேற்கொள்ளப்படும். வேறு ஏதேனும் வகையினதான அறிவுறுத்தலுடனான கூட்டுக்கணக்குகள் மீதியைப் பார்வையிடுவதற்காக மட்டுமே கிடைக்கக்கூடியதாகவிருக்கும்.

3.9 Pay to Mobile அத்துடன் / அல்லது Pay Someone சேவைகளைப் பயன்படுத்தும் தனி நோக்கத்துக்காக, வாடிக்கையாளர், வங்கியில் பேணப்படும் அவரது கணக்குகளுள் ஒன்றை முதன்மையாகப் பெறும் கணக்காக குறித்தல் வேண்டும். இம்முதன்மைக் கணக்கு வங்கியில் பதிவுசெய்யப்பட்ட வாடிக்கையாளரின் கைடக்கத்தொலைபேசி இலக்கத்துக்கு இணைக்கப்படுதல் வேண்டும். Pay to Mobile அத்துடன் / அல்லது Pay Someone ஊடாக வாடிக்கையாளரினால் பெறப்பட்ட எல்லா வரவுகளும் குறிக்கப்பட்ட முதன்மைக் கணக்குக்கு தன்னிச்சையாக வரவுவைக்கப்படுதல் வேண்டும், ஆயின் அத்தகைய கணக்கு ஒரு நடைமுறை அல்லது சேமிப்பு வங்கிக் கணக்காகவிருத்தல் வேண்டும். குறிக்கப்பட்ட முதன்மைக் கணக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் காரணமாக மூடப்படுகின்ற அல்லது செயலில் இல்லாத அல்லது கிடைக்கக்கூடியதாகவிராத பட்சத்தில், வாடிக்கையாளருக்கு அறிவிப்பதன் மேல், அவரது வேறு கணக்கை / கணக்குகளுள் ஏதேனும் ஒன்றை முதன்மைக் கணக்காக குறிப்பதற்கு வாடிக்கையாளரினால் இத்தால் வங்கிக்கு அதிகாரமளிக்கப்படுகின்றது.

3.10 கீழே 6.1 ஆம் வாசகத்தின் கீழ், குறிப்பிடப்பட்டவாறு கொடுக்கல்வாங்கலுடன் இணைந்த வேறு விதிப்பனவுகள் உள்ளடங்கலாக போதிய நிதி வாடிக்கையாளரின் கணக்கில் (கணக்குகளில்), கிடைக்கக்கூடியதாகவிருந்தாலொழிய, வாடிக்கையாளர் மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவை ஊடாக கொடுக்கல்வாங்கல்களைப் பயனுறுத்துவதற்கு எத்தனித்தலாகாது. எதிர்காலத் திகதியொன்றுக்கு அட்டவணைப்படுத்தப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள், இயைபான திகதியில் மற்றும் நேரத்தில் அக்கணக்கில் (கணக்குகளில்) போதிய நிதி கிடைக்கக்கூடியதாகவிருப்பின் மட்டுமே வங்கியினால் நிறைவேற்றப்படும் என வாடிக்கையாளர் உடன்படுகின்றார். வாடிக்கையாளர் எவையேனும் கொடுப்பனவு அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளும் நேரத்தில் அல்லது அத்தகைய கொடுப்பனவுகள் வருமதியாக வருகின்ற நேரத்தில் கீழே 6.1 ஆம் வாசகத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட வேறு விதிப்பனவுகளுடன் சேர்த்து அத்தகைய அறிவுறுத்தல்களை எதிர்கொள்வதற்கான போதிய நிதி இருந்தாலொழிய வாடிக்கையாளரின் அவ்வறிவுறுத்தல்களைச் செய்முறைப்படுத்துவதற்கான எவ்விதக்கடப்பாட்டின் கீழும் வங்கி இல்லை என அல்லது வங்கியானது அத்தகைய சந்தர்ப்பத்தில் கொடுப்பனவு செய்யப்படாமை பற்றிய அறிவித்தலை வாடிக்கையாளருக்கு வழங்குவதற்கு தேவைப்படுத்தப்படுவதில்லை என வாடிக்கையாளர் மேலும் உடன்படுகின்றார்.

3.11 வங்கியின் அலுவலர் ஒருவரினால் / அலுவலர்களினால் அதிகாரவளிப்பைத் தேவைப்படுத்தும் வாடிக்கையாளரின் கோரிக்கைகள் / அறிவுறுத்தல்கள் உடனடியாக அல்லது தன்னிச்சையாக பயனுறுத்தப்படாது எனவும் வங்கியானது, வாடிக்கையாளருக்கான அறிவித்தலுடன் அல்லது அறிவித்தலின்றி அதன் தனித் தற்றுணிபில் அத்தகைய அறிவுறுத்தல்களை அனுமதிப்பதற்கான அல்லது அனுமதிக்காமல் இருப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளது எனவும் வாடிக்கையாளர் உடன்படுதல் வேண்டும்.

3.12 கீழே வாசகம் 6.1 இல் குறிப்பீடுசெய்யப்பட்ட கணக்கு (கணக்குகள்) கூட்டுக்கணக்கொன்றாக இருக்கின்ற பட்சத்தில், ஒவ்வொரு கணக்கு வைத்திருப்பவரும் மொபைல் பேங்கிங் அத்துடன்/ அல்லது இணைய வங்கித்தொழில் சேவையைப் பயன்படுத்துவதிலிருந்து எழுகின்ற எல்லாக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் கூட்டாகவும் தனியாகவும் பொறுப்பாதல் வேண்டும்.

3.13 வாடிக்கையாளர் சார்பில் கொடுப்பனவொன்றைச் செய்யும்போது, வங்கியானது வாடிக்கையாளரின் முகவர் ஒருவராகவோ அல்லது கொடுப்பனவு நெறிப்படுத்தப்படுகின்ற மூன்றாம் திறத்தவரின் முகவர் ஒருவராகவோ செயலாற்றுவதில்லை என வாடிக்கையாளர் உடன்படுகின்றார்.

3.14 எவ்வகையினவுமான வழிவகைகளைப் பயன்படுத்தி மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவை மூலம் வாடிக்கையாளரினால் பயனுறுத்தப்படும் பயனர் செயற்பாடு மற்றும் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய பதிகைகளைப் பேணுவதற்கும் குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல் / செயற்பாடு ஒன்று பயனர் ID மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்துவதன் மூலம் பயனுறுத்தப்பட்டது என நிலைநாட்டும் அல்லது சரிபார்க்கும் நோக்கத்துக்காக அத்தகைய பதிவேடுகளைப் பயன்படுத்துவதற்கு வாடிக்கையாளர் வங்கிக்கு இத்தால் அதிகாரமளிக்கின்றார்.

3.15 சிவப்பு அறிவித்தல்களைக் கொடுத்துத்தீர்த்தல் போன்ற அவசர கொடுக்கல்வாங்கல்களைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவை கிடைக்கக்கூடியதாக்கப்படுதலாகாது என்பதுடன் அது வங்கியின் கிளையொன்றில் செய்யப்படுதல் வேண்டும் என வாடிக்கையாளர் இத்தால் உடன்படுகின்றார்.

3.16 வாடிக்கையாளர், மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவை ஊடாக செய்முறைப்படுத்தப்பட்ட எல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றிய வங்கியின் பதிவேடுகள் மற்றும் வங்கிக்கூற்றுக்கான எல்லா நோக்கங்களுக்காகவும் முடிவானதாகவும் வாடிக்கையாளர் மீது பிணிக்கப்படுவதாகவும் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

3.17 பி.ப 8 மணியின் பின்னர் மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவை அல்லது வேறு ஏதேனும் வழி மூலம் மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்களின் பயனுறும் திகதி நிகழ் நேரத்தில் இடம்பெறும், ஆனால் அதற்கடுத்த நாள் இற்றைப்படுத்தப்படுதல் வேண்டும் என வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

4. கொடுக்கல்வாங்கல்களின் பாதுகாப்பு

4.1 வாடிக்கையாளர் மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவைக்கு தீங்கு விளைவிக்கும் அச்சுறுத்தல்களுக்கு எதிரான போதிய பாதுகாப்பு வழிமுறைகளுடன் முறையாக தொழிற்படும் ஒழுங்கில் மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவையைப்

பயன்படுத்துவதற்கு அவசியமான ஏதேனும் சாதனத்தைப் பெற்றுப் பேணுவதற்கு உடன்படுகின்றார் என்பதுடன் மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவையை அணுகுவதற்கு பழுதடைந்த, குறைபாடுடைய அல்லது பாதுகாப்பற்ற சாதனத்தை அத்துடன் / அல்லது மென்பொருளைப் பயன்படுத்தாமல் இருப்பதற்கு அல்லது வங்கிக்கு தீங்கிழைக்கும் ஏதேனும் முறையில் மொபைல் பேங்கிங் சேவையைப் பயன்படுத்தாமல் இருப்பதற்கும் பொறுப்பேற்கின்றார்.

4.2 மொபைல் பேங்கிங் செயலியானது, ஒன்றில் பயோமெட்ரிக்ஸ் ஊடாக அல்லது ஒரு பயனர் ID மற்றும் ஒரு கடவுச்சொல்லைப் பயன்படுத்துவதன் மூலம் அணுகப்படமுடியும் என தான் அறிவதாக வாடிக்கையாளர் இத்தால் ஒப்புக்கொள்கின்றார்.

4.3 பயோமெட்ரிக்ஸ் மூலம் மொபைல் பேங்கிங் செயலிக்கான பதிகை புகுதலை (Login) இயலச்செய்வதானது அதே சாதனத்தில் பயோமெட்ரிக்ஸ் பதிவுசெய்யப்படுகின்ற எவரேனும் மூன்றாம் திறத்தவரும் மொபைல் பேங்கிங் செயலியை அணுகுவதனை இயலச்செய்யும் என வாடிக்கையாளர் மேலும் உடன்பட்டு விளங்கிக்கொள்கின்றார்.

4.4 மொபைல் பேங்கிங் செயலி அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவையின் தொடக்க அணுகுகையை உடனடுத்துப் பின்னரும் அதன் பின்னர் கிரமமான இடைவெளிகளிலும் கடவுச்சொல்லை மாற்றுவதற்கு வாடிக்கையாளர் இத்தால் உடன்படுகின்றார்.

4.5 வாடிக்கையாளர், எவரேனும் அதிகாரமளிக்கப்படாத நபருக்கு / நபர்களுக்கு வெளிவிடுவதிலிருந்து அல்லது அவர்களால் அணுகப்படுவதிலிருந்து அல்லது அவர்களால் பயன்படுத்தப்படுவதிலிருந்து மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவையைப் பாதுகாப்பதற்கு (கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான எல்லாத்தரவுகளும் தகவல்களும் உட்பட) போதிய வழிமுறைகளை ஏற்பாடுசெய்து பேணுதல் வேண்டும்.

4.6 எவரேனும் ஆளினால் பயனர் ID மற்றும் கடவுச்சொல்லின் அதிகாரமளிக்கப்படாத பயன்பாடு பற்றிய ஏதேனும் செயல் அல்லது எத்தனிப்பு பற்றி அல்லது மூன்றாம் திறத்தவரொருவரின் பயோமெட்ரிக்ஸ் ஊடாக மொபைல் பேங்கிங் செயலிக்கான அதிகாரமளிக்கப்படாத அணுகுகை பற்றிய ஏதேனும் செயல் அல்லது எத்தனிப்பு பற்றி வாடிக்கையாளருக்குத் தெரியவந்தால் வாடிக்கையாளர் அதுபற்றி உடனடியாக வங்கிக்கு அறிவித்தல் வேண்டும்.

4.7 அதன் பயனர் ID மற்றும் கடவுச்சொல்லை கண்டிப்பான இரகசியத்தன்மையுடன் வைத்திருப்பதற்கும் எச்சூழ்நிலையின் கீழும் எந்நேரத்திலும் அதனை வெளிவிடாமல் இருப்பதற்கும் அல்லது எவரேனும் ஆள் அதனை அணுகுவதற்கு இடமளிக்காமல் இருப்பதற்கும் வாடிக்கையாளர் இத்தால் பொறுப்பேற்கின்றார்.

5. பயோமெட்ரிக்ஸ் இன் பயன்பாடு

5.1 மொபைல் பேங்கிங் செயலிக்கு பதிகை புகுவதற்கான (Login) பயோமெட்ரிக்ஸ் இன் பயன்பாடு, வாடிக்கையாளரின் பயோமெட்ரிக்ஸ் சாதனத்துக்கு பதிவுசெய்யப்படின் மட்டுமே அனுமதிக்கப்படுதல் வேண்டும் என வாடிக்கையாளர் இத்தால் உடன்படுகின்றார். அத்தகையதாக, கைபேசிச் சாதனத்துக்கு

பயோமெட்ரிக்ஸ் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒரே நபர் வாடிக்கையாளர் மட்டுமே என வாடிக்கையாளர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

5.2 வாடிக்கையாளரின் கைபேசிச் சாதனத்தில் தேக்கிவைக்கப்பட்ட பயோமெட்ரிக்ஸ் சான்றாவணங்கள் அவருக்குச் சொந்தமானவை என வாடிக்கையாளர் உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் வாடிக்கையாளரின் கைபேசிச் சாதனத்தில் எவரேனும் மூன்றாம் திறத்தவரின் பயோமெட்ரிக்ஸ் சான்றாவணங்கள் தேக்கிவைக்கப்படவில்லை எனவும் வாடிக்கையாளர் மொபைல் பேங்கிங் செயலிக்கு பதிகை புகுவதற்கு (Login) அவரது சொந்த பயோமெட்ரிக் சான்றாவணங்களை மட்டுமே பயன்படுத்துதல் வேண்டும் எனவும் உறுதிப்படுத்துதல் வேண்டும். வாடிக்கையாளர், மொபைல் பேங்கிங் செயலிக்கு பதிவுசெய்யப்படுகின்ற சாதனத்தில் மூன்றாம் திறத்தவரின் பயோமெட்ரிக்ஸ் இனை தேக்கிவைப்பதுடன் இணைந்த ஆபத்துக்களையும் அவற்றின் மூலம் கொடுக்கல்வாங்கலின் பாதுகாப்பு ஆபத்துக்குட்படுத்தப்படலாம் என்பதையும் மேலும் விளங்கிக்கொண்டு ஒப்புக்கொள்கின்றார்.

5.3 வாடிக்கையாளருக்கு முழுதொத்த உடன்பிறந்தவர் ஒருவர் இருப்பின் அவர் மெய்யென உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக முக அங்கீகாரத்தைப் பயன்படுத்துதலாகாது; இவ்விடயத்தில் வாடிக்கையாளர் மொபைல் பேங்கிங் செயலிக்கு பதிகை புகுவதற்கு (Login) பயோமெட்ரிக்ஸ் இற்குப் பதிலாக கடவுச்சொல்லைப் பயன்படுத்துதல் வேண்டும்.

5.4 வாடிக்கையாளர் மெய்யென உறுதிப்படுத்தும் நோக்கங்களுக்காக வாடிக்கையாளரின் பயோமெட்ரிக் சான்றாவணங்களின் பயன்பாட்டின் பாதுகாப்பை வேறுவகையாக ஆபத்துக்குட்படுத்துகின்ற வகையில் வாடிக்கையாளரின் கைபேசிச் சாதனத்தினால் வழங்கப்படும் ஏதேனும் தொழிற்பாட்டை இயலாமலாக்குவதற்கான ஏதேனும் நடவடிக்கையை எடுத்தலாகாது அத்துடன் / அல்லது அதன் எவையேனும் அமைப்புகளுக்கு (Settings) உடன்படுதலாகாது (உ+ம் முக அங்கீகாரத்துக்கு " attention - aware" என்பதை இயலாமலாக்குதல்.)

5.5 வாடிக்கையாளரின் முக / விரல் பதிவு அடையாளத்தின் பாதுகாப்பு அல்லது வேறு பாதுகாப்புக் குறியீடு ஆபத்துக்குள்ளாக்கப்பட்டுள்ள பட்சத்தில், வாடிக்கையாளர் உடனடியாக வங்கிக்கு அறிவித்தல் வேண்டும்; அச்சந்தர்ப்பத்தில் வங்கியானது பயனர் ID இனை செயற்படுத்தாது நிறுத்துதல் வேண்டும். வாடிக்கையாளர் பயனர் ID இனை மீளச் செயற்படுத்துவதற்கு விரும்புகின்ற பட்சத்தில், வாடிக்கையாளர் மிகக்கிட்டிய NDB வங்கிக் கிளைக்கு எழுத்திலான கோரிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5.6 மொபைல் பேங்கிங் செயலி பயோமெட்ரிக் மூலமான பதிகை புகுதல் சேவை நோக்கங்களுக்காக, வாடிக்கையாளரின் அனுமதிக்கப்பட்ட கைபேசிச் சாதனத்தில் பதிவுசெய்யப்பட்ட முக / விரல் பதிவு அடையாளத்தை மொபைல் பேங்கிங் செயலி அணுகுகைக்கு உட்படுத்தும் என வாடிக்கையாளர் ஒப்புக்கொண்டு உடன்படுதல் வேண்டும் என்பதுடன் மொபைல் பேங்கிங் செயலி பயோமெட்ரிக் மூலமான பதிகை புகுதல் சேவையை வழங்குவதற்கு வங்கி அத்தகைய தகவலை அணுகுவதற்கும் பயன்படுத்துவதற்கும் வாடிக்கையாளர் சம்மதமளித்தலும் வேண்டும்.

5.7 வாடிக்கையாளரின் அனுமதிக்கப்பட்ட கைபேசிச் சாதனத்தைப் பாதுகாப்பதற்கான தேவையை வாடிக்கையாளர் இத்தால் ஒப்புக்கொள்கின்றார் என்பதுடன் மொபைல் பேங்கிங் செயலி பயோமெட்ரிக் மூலமான பதிகை புகுதல் சேவையை அணுகுவதற்கு (வாடிக்கையாளரினால் அல்லது வேறுவகையாக

அதிகாரமளிக்கப்படினும் அல்லது அதிகாரமளிக்கப்படாவிடினும்) வாடிக்கையாளரின் அனுமதிக்கப்பட்ட கைபேசிச் சாதனத்தின் எல்லாப் பயன்பாட்டிற்கும் பொறுப்பாகவிருத்தலும் வேண்டும்.

5.8 மொபைல் பேங்கிங் நியதிநிபந்தனைகளுக்கு மேலதிகமாகவும் அவற்றில் உள்ள பொறுப்புத்துறப்புக்களை குறைக்காமலும் பொறுப்பைத் தவிர்க்காமலும், அனுமதிக்கப்பட்ட கைபேசிச் சாதனத்தின் முக / விரல் பதிவை மெய்யென உறுதிப்படுத்தும் தொகுதி வங்கியினால் வழங்கப்படுவதில்லை எனவும் வங்கியானது, ஏதேனும் அனுமதிக்கப்பட்ட கைபேசிச் சாதனத்தின் முக / விரல் பதிவை மெய்யென உறுதிப்படுத்தும் தொழிற்பாட்டின் பாதுகாப்பு பற்றியும் சாதனத்தின் உற்பத்தியாளர் முன்வைக்கின்ற அதே முறையில் அது தொழிற்படுகின்றதா என்பது பற்றியும் எவ்வித முன்வைப்பையும் செய்யாது அல்லது நம்புறுதியளிக்காது என வாடிக்கையாளர் இத்தால் ஒப்புக்கொள்கின்றார்.

5.9 மொபைல் பேங்கிங் செயலி பயோமெட்ரிக் மூலமான பதிகை புகுதல் சேவை எல்லா நேரங்களிலும் அணுகப்படக்கூடியதாகவிருக்கும் அல்லது ஏதேனும் இலத்திரனியல் சாதனம், மென்பொருள், உட்கட்டமைப்பு அல்லது வங்கி காலத்துக்குக்காலம் வழங்குகின்றவாறான வேறு இலத்திரனியல் வங்கிச்சேவைகளுடன் தொழிற்படும் என வங்கி குறிப்பீடு செய்யாது அல்லது நம்புறுதியளிக்காது.

5.10 சட்டங்கள் வங்கியின் பொறுப்பை தவிர்ப்பதிலிருந்து அல்லது வரையறுப்பதிலிருந்து வங்கியைத் தடைசெய்தாலொழிய, மொபைல் பேங்கிங் செயலி பயோமெட்ரிக் மூலமான பதிகை புகுதல் சேவையின் பயன்பாடு அல்லது எத்தனிக்கப்பட்ட பயன்பாடு அல்லது மொபைல் பேங்கிங் செயலி பயோமெட்ரிக் மூலமான பதிகை புகுதல் சேவை ஊடாக அல்லது அது தொடர்பில் வாடிக்கையாளரின் அறிவுறுத்தல்கள் அல்லது எவையேனும் அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் வாடிக்கையாளரினால் ஏற்கநேர்ந்த ஏதேனும் இழப்புக்கு வங்கி பொறுப்பாவதில்லை.

5.11 மொபைல் பேங்கிங் செயலி பயோமெட்ரிக் மூலமான பதிகை புகுதல் சேவையின் ஏதேனும் முறையற்ற பயன்பாடு தொடர்பாக வங்கி ஏற்கநேரும் எல்லா இழப்புக்களுக்கும் சேதங்களுக்கும் வாடிக்கையாளர் வங்கிக்கு நட்டோத்தரவாதமளித்தல் வேண்டும்.

6. விதிப்பனவுகள் மற்றும் கொடுப்பனவுகள்

6.1 வங்கியினால் தீர்மானிக்கப்பட்டு வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் உள்ள கட்டண அட்டவணையில் பதிவிடப்பட்டவாறான நிலவுகின்ற வீதங்களில் அல்லது எதிர்கால வீதங்களில் மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவை ஊடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான எல்லா விதிப்பனவுகளையும் மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவையின் பயன்பாடு தொடர்பில் வசதிக் கட்டணங்கள், சட்ட விதிப்பனவுகள் மற்றும் நியதிச்சட்ட விதிப்பனவுகள் எவையேனும் இருப்பின் அவை உட்பட வேறு செலவுகளையும் வாடிக்கையாளரின் கணக்கு(கணக்குகள்) எவற்றுக்கும் வங்கி பற்றுவைப்பதற்கு வாடிக்கையாளர் இத்தால் அதிகாரமளிக்கின்றார்.

6.2 உரிய திகதியில் வாடிக்கையாளரின் கணக்கிலிருந்து (கணக்குகளிலிருந்து) வசதிக்கட்டணம் அறவிடப்படமுடியாத பட்சத்தில், வாடிக்கையாளர், வசதிக் கட்டணத்தை விதிப்பனவு செய்து பின்னரான திகதியொன்றில் தனது கணக்குகளுள் ஏதேனும் ஒன்றுக்கு பற்றுவைப்பதற்கு இத்தால் வங்கிக்கு

அதிகாரமளிக்கின்றார். (ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, இவ்வேற்பாடு NEOS Pay வசதியின் பயன்பாட்டினூடாக கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் நோக்கத்துக்காக மட்டும் மொபைல் பேங்கிங் செயலியைப் பயன்படுத்துகின்ற வாடிக்கையாளர்களுக்கு ஏற்புடையதாதலாகாது.)

7. இழப்பு, தாமதங்கள் முதலியனவற்றுக்கான பொறுப்புக்கள்

7.1 வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட அல்லது பதிலீடு செய்யப்பட்ட பயனர் ID மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்துவதன் மூலம் ஏற்கநேர்ந்த அல்லது கொடுத்துத்தீர்க்கப்பட்ட ஏதேனும் இழப்பு அல்லது பொறுப்பிலிருந்து வாடிக்கையாளர் வங்கியை விடுவித்தல் வேண்டும்.

7.2 மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவை ஊடாக வழங்கப்பட்ட எவையேனும் அறிவுறுத்தல்களை எத்தகையதுமான ஏதேனும் காரணத்துக்காக ஏற்றுக்கொள்ளாமையின் விளைவாக அத்துடன் / அல்லது அவற்றுக்கு அமைந்தொழுகாமையின் விளைவாக வாடிக்கையாளரினால் ஏற்கநேர்ந்த அல்லது அடையப்பட்ட ஏதேனும் இழப்புக்கு, சேதத்துக்கு அல்லது பொறுப்புக்கு வாடிக்கையாளர் வங்கியைப் பொறுப்பானதாக வைத்திருத்தலாகாது.

7.3 மூன்றாம் திறத்தவர்களுடனான விற்பனை அல்லது சேவைகளின் வழங்குகை ஒப்பந்தங்கள் தொடர்பில் வாடிக்கையாளரினால் மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவை ஊடாகச் செய்யப்பட்ட கொடுப்பனவுகளின் விடயத்தில், வாடிக்கையாளர், மூன்றாம் திறத்தவர்களின் கடப்பாடுகளை எதிர்கொள்வதில் அவர்களின் தரப்பில் உள்ள எவையேனும் விடுபாடுகள் / தவறுகைகளுக்கு எத்தகையதுமான ஏதேனும் முறையில் வங்கியைப் பொறுப்பானதாக வைத்திருத்தலாகாது என வாடிக்கையாளர் உடன்படுதல் வேண்டும்.

7.4 எவையேனும் பண்டங்கள் அல்லது சேவைகள் தொடர்பில் வாடிக்கையாளரினால் செய்யப்பட்ட எவையேனும் கொடுப்பனவுகள் அடுத்துவரும் வேலை நாளின் இறுதியில் இற்றைப்படுத்தப்படும் என வாடிக்கையாளர் உடன்படுதல் வேண்டும் என்பதுடன் சேவை வழங்குநரின் தாமதங்களினால் ஏற்படுத்தப்படும் தாமதமான இற்றைப்படுத்தல்களுக்கு வங்கியைப் பொறுப்பானதாக வாடிக்கையாளர் வைத்திருத்தலுமாகாது.

7.5 கைபேசிச் சாதனம் அத்துடன் / அல்லது தனிப்பட்ட கணினி காணாமல் போதல் தொடர்பில் எவரேனும் ஆட்களினால் ஏதேனும் நேரத்தில் அல்லது காலத்துக்குக்காலம் குற்றவழக்கு தொடுக்கப்படக்கூடிய, அடையப்படக்கூடிய, ஏற்கநேர்ந்த, செய்யப்படக்கூடிய அல்லது முன்வைக்கப்படக்கூடிய (சட்ட மற்றும் வேறு செலவுதொகைகள், விதிப்பனவுகள் மற்றும் செலவுகள் எல்லாம் உட்பட) வழக்குகள், சேதங்கள், இழப்புக்கள், செலவுதொகைகள், செலவுகள், உரிமைக்கோரிக்கைகள், பொறுப்புக்கள் அல்லது கோரிக்கைகள் எல்லாவற்றுக்கும் எதிராக இல்லாதொழிக்கமுடியாத வகையில் வாடிக்கையாளர் வங்கிக்கு நட்டோத்தரவாதமளித்தல் வேண்டும்.

8. வங்கியின் பொறுப்புக்கள்

8.1 மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவைகள் தொடர்பான வங்கியின் முறைமைகள், காலத்துக்குக்காலம் வங்கிக்கு ஏற்புடையதாகக்கூடிய ஏதேனும் சட்டம், விதிகள்,

ஒழுங்குவிதிகள், வழிகாட்டுநெறிகள், சுற்றறிக்கைகள், நடத்தைக்கோவைகள் மற்றும் நிலவுகின்ற சந்தைச் செயன்முறைகளை கருத்திற்கொண்டு முறைமையைத் தொழிற்படுத்துவதிலான ஆபத்துக்களை முகாமைசெய்வதற்கான போதிய பாதுகாப்பு வடிவமைப்புக்களையும் கட்டுப்பாடுகளையும் கொண்டுள்ளன என உறுதிப்படுத்துவதற்கான நியாயமான நடவடிக்கைகளை வங்கி எடுக்கும் என வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கின்றார்.

8.2 வரையறையின்றி ஏதேனும் அரசிறை, இலாபங்கள் அல்லது சேமிப்புக்களின் இழப்பு உட்பட எவைனேும் இடைநேர்விளைவான, மறைமுகமான, விசேட, விளைவாந்தன்மையினவான அல்லது தண்டிக்கும் சேதங்களுக்கு வங்கியோ அல்லது எவரேனும் சேவை வழங்குநரோ வாடிக்கையாளருக்கு எச்சந்தர்ப்பத்திலும் பொறுப்பாதலாகாது என வாடிக்கையாளர் உடன்படுகின்றார்.

8.3 வங்கியானது, ஏற்புடையனவான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க இலங்கை மத்திய வங்கியின் நிதி உளவறிதற் கூறுக்கு எவையேனும் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களையும் விதிக்கப்பட்ட தொடக்க நிலைக்கு மேலான கொடுக்கல்வாங்கல்களையும் அறிக்கையிடுதல் வேண்டும். வங்கியானது, இலங்கையில் நிலவுகின்ற எவையேனும் சட்டங்கள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கிணங்க ஏதேனும் நடவடிக்கையை எடுப்பதற்கு பொறுப்பாதலாகாது. எவ்வாறாயினும், அனுமதிக்கப்பட்ட தொடக்க நிலைக்கு மேலான ஏதேனும் கொடுக்கல்வாங்கல் வங்கியினால் தன்னிச்சையாக முடக்கப்படுதல் வேண்டும்.

8.4 வங்கியின் மிக்க கவனயீனம் அல்லது வேண்டுமென்ற தவறுகை காரணமாகவிருந்தாலொழிய, வங்கி அல்லது அதன் ஊழியர்கள் எவரும் பின்வருவனவற்றிலிருந்து அல்லது அவை தொடர்பாக எழுகின்ற விளைவுகளுக்கு வாடிக்கையாளருக்கான ஏதேனும் பொறுப்பை அல்லது பொறுப்புடைமையை ஏற்றல் ஆகாது:

(i) வாடிக்கையாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்படாத வேறு எவரேனும் ஆளினாலான மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவைகளின் பயன்பாடு அத்துடன் / அல்லது அத்தகைய பயன்பாட்டின் விளைவாக எவையேனும் தகவல்களுக்கான அணுகுகை,

(ii)வரையறையின்றி, ஏதேனும் தொடர்பாடல் வலையமைப்பின் தவறுகை, எவரேனும் மூன்றாம் திறத்தவரான சேவை வழங்குநர்களின் செயல் அல்லது செய்யாமை, பொறிமுறைத் தவறுகை, மின்சாரத் தவறுகை, சாதனத்தின் பிறழ் பயன்பாடு, உடைவு அல்லது போதியதாக இராமை, நிறுவுகை அல்லது வசதிகள் அல்லது (சட்டவலுவைக் கொண்டிருப்பினும் அல்லது கொண்டிருக்காவிடினும்) ஏதேனும் சட்டம், விதிகள், ஒழுங்குவிதிகள், கோவைகள், பணிப்புக்கள், ஒழுங்குபடுத்தும் வழிகாட்டுநெறிகள் அல்லது அரசாங்கப் பணிப்புரைகள் உட்பட வங்கியின் நியாயமான கட்டுப்பாட்டுக்கு அப்பால் எவையேனும் செயல்கள், செய்யாமைகள் அல்லது சூழ்நிலைகளினால் ஏற்படுத்தப்பட்ட மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவையை வழங்குவதிலான, அத்தகைய சேவைகள் தொடர்பான அறிவுறுத்தல்களை அல்லது தகவல்களை அனுப்புவதிலான அல்லது இணையத்தளத்துடன் (தளங்களுடன்) இணைப்பதிலான எவையேனும் தகவல்கள், இடைமறிப்பு, இடைநிறுத்துகை, தாமதம், இழப்பு, கிடைக்கக்கூடியதாக இராமை, சிதைவு அல்லது வேறு தவறுகை; அத்துடன்

(iii)வாடிக்கையாளர், சேவைகள் தொடர்பான எவையேனும் தகவல்களை அத்துடன் / அல்லது கொடுக்கல்வாங்கல்களை அனுப்புதல் அத்துடன் / அல்லது தேக்கிவைத்தல் அத்துடன் / அல்லது

எவரேனும் தொடர்பாடல் வலையமைப்பு வழங்குநரின் ஏதேனும் முறைமை, சாதனம் அல்லது உபாயத்தினூடாக அல்லது அதில் மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவையைப் பயன்படுத்துவதைப் பின்பற்றி வாடிக்கையாளரினால் மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கையாளுகைகள்.

9. வாடிக்கையாளரின் பொறுப்புக்கள்

9.1 வாடிக்கையாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்படாத எவரேனும் நபர் மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவைக்கு பதிவுசெய்தல், பதிகை புகுதல் மற்றும் பயன்படுத்தல் அத்துடன் / அல்லது அத்தகைய பயன்பாட்டின் விளைவாக எவையேனும் தகவல்கள் அல்லது அறிக்கை அல்லது வேறு ஏதேனும் தகவலுக்கான அணுகுகையிலிருந்து அல்லது அவை தொடர்பாக எழுகின்ற எல்லா விளைவுகளுக்கும் வாடிக்கையாளர் முழுமையாக ஆளாதலும் பொறுப்பாதலும் வேண்டும் என்பதுடன் சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களது முறையான அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் எவரினாலும் ஏற்கநேரும் எவ்வகையினதுமான பொறுப்புக்கள், உரிமைக்கோரிக்கைகள், கோரிக்கை, இழப்புக்கள், சேதங்கள் பணம், விதிப்பனவுகள் மற்றும் செலவுகள் எல்லாவற்றுக்கும் எதிராகவும் அவை தொடர்பில் அவர்களினால் அல்லது அவர்களுக்கு எதிராக கொணரப்படக்கூடிய வழக்குகள் அல்லது வழக்குநடவடிக்கைகள் எல்லாவற்றுக்கும் எதிராகவும் அவர்களுக்கு நட்டோத்தரவாதமளித்தல் வேண்டும்.

9.2 வாசகம் 3.6 இற்கு அமைய, வங்கியின் அல்லது அதன் ஊழியர்களின் மிக்க கவனயீனம் அல்லது வேண்டுமென்ற தவறுகையினால் ஏற்படுத்தப்பட்ட தவறவிடப்பட்ட அல்லது பிறழ்நெறிப்படுத்தப்பட்ட கொடுப்பனவின் விளைவாக மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவையின் பயன்பாட்டினூடாக மேற்கொள்ளப்பட்ட அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்களினால் ஏற்படுத்தப்பட்ட நிதிகளின் இழப்பு அல்லது இடந்தவறுகைக்கு வாடிக்கையாளர் பொறுப்பாதலாகாது.

9.3 வங்கி அல்லது அதன் ஊழியர்களின் தரப்பில் ஏதேனும் மிக்க கவனயீனம், மோசடி அல்லது வேண்டுமென்ற தவறுகை இன்றி இந்நியதிகளின்கீழ் மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவையை வழங்குதல் அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட எவையேனும் தகவல்கள் அல்லது அறிக்கை / அறிக்கைகள் தொடர்பாக அல்லது வங்கியின் தத்துவங்கள் மற்றும் உரிமைகளைப் பிரயோகிப்பதில் அல்லது பேணிக்காப்பதில், வங்கி, அதன் ஊழியர்கள் அல்லது சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களது முறையான அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் எவரினாலும் ஏற்கநேரும் எவ்வகையினவுமான பொறுப்புக்கள், உரிமைக்கோரிக்கைகள், கோரிக்கை, இழப்புக்கள், சேதங்கள், பணம், விதிப்பனவுகள் மற்றும் செலவுகள் எல்லாவற்றுக்கும் எதிராகவும் அவர்களினால் அல்லது அவர்களுக்கு எதிராக கொணரப்படக்கூடிய வழக்குகள் அல்லது வழக்குநடவடிக்கைகள் எல்லாவற்றுக்கும் எதிராகவும் வாடிக்கையாளர் அவர்களுக்கு நட்டோத்தரவாதமளித்தல் வேண்டும்.

9.4 உதாரணமாக தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரிகள், சமூக வலையமைப்புக்கள் முதலியன போன்ற ஏதேனும் இலத்திரனியல் ஊடகத்தில் பயன்படுத்தப்படுகின்ற பொதுவான பயனர் ID மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவையைப் பயன்படுத்துவதன் காரணமாக எழக்கூடிய விளைவுகள் பற்றி வாடிக்கையாளர் முழுமையாக

அறிந்துள்ளார் எனவும் அத்தகைய நிலைமைகளைத் தவிர்ப்பதற்கான தோதான முற்காப்பு வழிமுறைகளை எடுப்பார் எனவும் எவையேனும் பயனர் ID கள் / கடவுச்சொல் திருட்டுக்களுக்கு வங்கியைப் பொறுப்பாக வைத்திருக்கமாட்டார் எனவும் வாடிக்கையாளர் உடன்பட்டு ஒப்புக்கொள்கின்றார்.

10. நியதிகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றுதல்

10.1 வங்கியானது, வாடிக்கையாளர்களுக்கான அறிவித்தலுடன் அதன் முழுமையான தற்றுணிபில் இந்நியதி நிபந்தனைகள் எவற்றையும் திருத்துவதற்கு, குறைநிரப்புவதற்கு அல்லது வேறுபடுத்துவதற்கு எந்நேரத்திலும் உரித்துடையதாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய திருத்தம், குறைநிரப்புகை அல்லது வேறுபடுத்துகை வாடிக்கையாளர் மீது பிணிக்கப்படுதலும் வேண்டும். நியதிநிபந்தனைகளின் இற்றைப்படுத்தப்பட்ட பதிப்பு (பதிப்புகள்) SMS மூலம் வாடிக்கையாளருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் வங்கியின் கூட்டாண்மை நிறுவன இணையத்தளத்தில் கிடைக்கக்கூடியதாக்கப்படுதலும் வேண்டும்.

10.2 வங்கியானது, மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவையின் பயன்பாட்டுக்கு இணைக்கப்பட்ட சிறப்புரிமைகளைத் தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன் காலத்துக்குக்காலம் வங்கி தகுதியானதெனக் கருதக்கூடியவாறாக, இதற்கு இணைக்கப்பட்ட இச்சிறப்புரிமைகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றுவதற்கான, வேறுபடுத்துவதற்கான, சேர்ப்பதற்கான அல்லது திருத்துவதற்கான முழுமையான தற்றுணிபையும் கொண்டிருத்தல் வேண்டும்.

10.3 மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவைகள், மொபைல் பேங்கிங் இனால் மேவப்படும் சேவைகளையும், வசதிகளையும் மற்றும் கொடுக்கல்வாங்கல்களையும் ஆளும் வங்கியின் அமைப்புப் புறவிதிகள் மற்றும் அமைப்பக விதிகள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள், இந்நியதிநிபந்தனைகள் மற்றும் வேறு எவையேனும் நியதிநிபந்தனைகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும்.

10.4 தனிநபர் கணக்குகளை ஆளும் வங்கியின் நியதி நிபந்தனைகள், மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவைகளினூடாக இதனகத்துப்பின்னர் திறக்கப்படும் எவையேனும் நிலையான கணக்குகளுக்கான வாடிக்கையாளர்களுக்கு ஏற்புடையனவாதலும் அவர்கள் மீது பிணிக்கப்படுதலும் வேண்டும்.

11. முடிவுறுத்துகை

11.1 வாடிக்கையாளர் மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவையின் பயன்பாட்டை முடிவுறுத்துவதற்கு தீர்மானிக்கின்றபட்சத்தில், வாடிக்கையாளர் 0094 112448888 என்ற இலக்கத்தினூடாக வங்கியின் 24 மணி நேர அழைப்பு மையத்தைத் தொடர்பு கொள்ளுதல் வேண்டும். வங்கியானது அதன் முழுமையான தற்றுணிபில் வாடிக்கையாளருக்கான முன்னறிவித்தலுடன் வாடிக்கையாளரின் பயனர் ID இனை செயலற்றதாக்குதல், வாடிக்கையாளரின் விபரக்குறிப்பை நீக்குதல் அத்துடன் / அல்லது மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவையை இரத்துச் செய்தல், மீளப்பெறுதல் அல்லது புதுப்பித்தல் வேண்டும்.

11.2 (i) மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவை வங்கியின் கொள்கைகளின்படி தொடர்ச்சியான காலப்பகுதியொன்றிற்கு பயன்படுத்தப்படாதிருப்பின்;

(ii) வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக தொடர்ச்சியான காலப்பகுதியொன்றிற்கு வசதிக் கட்டணம் செலுத்தப்படாவிடின் / வங்கியினால் அதனை அறவிடுவதற்கு போதிய நிதி கணக்குகளில் இல்லாவிடின்,

வாடிக்கையாளரின் பயனர் ID ஐ செயலிழக்கச் செய்வதற்கும் மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவையிலிருந்து வாடிக்கையாளரின் விபரக்குறிப்பை நீக்கிவிடுவதற்குமான உரிமையை வங்கி கொண்டுள்ளது என வாடிக்கையாளர் விளங்கிக்கொள்கின்றார். (ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, இவ்வேற்பாடு NEOS Pay வசதியின் பயன்பாட்டினூடாக கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் நோக்கத்துக்காக மட்டும் மொபைல் பேங்கிங் செயலியைப் பயன்படுத்துகின்ற வாடிக்கையாளர்களுக்கு ஏற்புடையதாதலாகாது.)

12. ஆளும் சட்டம் மற்றும் நியாயாதிக்கம்

12.1 சேவைகள் மற்றும் இந்நியதி நிபந்தனைகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சட்டங்களினால் ஆளப்படுதல் வேண்டும் என்பதுடன் அவற்றுக்கிணங்க பொருளமைத்துக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

12.2 வங்கி மற்றும் வாடிக்கையாளர் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நீதிமன்றங்களின் பிரத்தியேகமான நியாயாதிக்கத்திற்கு கீழ்ப்படிதல் வேண்டும்.

13. விசாரணைகள், முறைப்பாடுகள் மற்றும் பிணக்குத் தீர்த்தல்

13.1 மொபைல் பேங்கிங் அத்துடன் / அல்லது இணைய வங்கித்தொழில் சேவையின் பயன்பாடு தொடர்பில் ஏதேனும் முறைப்பாடு அல்லது விசாரணை வாடிக்கையாளருக்கு இருக்கின்றபட்சத்தில், வாடிக்கையாளர் 0094 112448888 என்ற இலக்கத்தினூடாக வங்கியின் 24 மணி நேர அழைப்பு மையத்துக்கு அழைப்பை ஏற்படுத்துதல் வேண்டும் அல்லது வங்கியின் கிளையொன்றுக்கு வருகைதருதல் வேண்டும். முறைப்பாடு தீர்க்கப்படாதிருப்பின், வாடிக்கையாளர் நிதி குறைகேள் அதிகாரி அல்லது இலங்கை மத்திய வங்கியினூடாக உதவியை நாடலாம்.

13.2 வங்கிக்கூற்றுத் திகதியிலிருந்து 14 நாட்களினுள் வாடிக்கையாளரினால் அவதானிக்கப்படும் கொடுக்கல்வாங்களில் உள்ள ஏதேனும் பிழை, ஒவ்வாமை அல்லது விட்டுவிடுகை பற்றி வங்கியின் கவனத்திற்கு வாடிக்கையாளர் கொண்டுவருதல் வேண்டும்.

14. NEOS PAY வசதி

14.1 NEOS Pay வசதியைப் பயன்படுத்துவதன் மூலம் மொபைல் பேங்கிங் செயலியினூடாக பயனுறுத்தப்படும் கொடுக்கல்வாங்கல்களுக்கு வங்கி பொறுப்பாதலாகாது என வாடிக்கையாளர் உடன்படுதல் வேண்டும்.

14.2 வாடிக்கையாளர் NEOS Pay வசதிக்காக பதிவுசெய்கின்ற வேறு நிதி நிறுவனங்களில் வைத்திருக்கப்படும் ஒவ்வொரு கணக்குக்கும் SMS மூலமான அறிவித்தல் வசதிக்கு பதிவு செய்துள்ளார் என அவர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

14.3 வணிகர்களினால் வழங்கப்படும் QR குறியீட்டிலிருந்து பெறப்படும் தகவல்களின் செம்மை தொடர்பாக கடப்பாடு அல்லது பொறுப்பு எதனையும் வங்கி கொண்டிருக்காது என வாடிக்கையாளர் மேலும் உடன்பட்டு ஒப்புக்கொள்கின்றார்.

14.4 தோற்றுவிக்கப்பட்டு முறையான நிதி நிறுவனத்துடன் பதிவுசெய்யப்படும் கையடக்கத்தொலைபேசி இலக்கத்துக்கு அனுப்பப்படும் எழுமாற்று எண்ணை வேறு எவரேனும் மூன்றாம் திறத்தவர்களுக்குப் பகிராமல் காப்பாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருப்பதற்கான முற்காப்பு வழிமுறைகளை வாடிக்கையாளர் எடுத்தல் வேண்டும்.

14.5 NEOS Pay வசதி தொடர்பான எவையேனும் முறைப்பாடுகள் இதன் விடய இலக்கம் 13 இல் விபரமாகக் கூறப்பட்ட முறைப்பாட்டு நடவடிக்கைமுறையின்படி கையாளப்படுதல் வேண்டும் என வாடிக்கையாளர் உடன்படுகின்றார்.

15. வாடிக்கையாளரின் வெளிப்படுத்துகை

15.1 (இதனகத்துப்பின்னர் “வங்கி” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி ஆனது மொபைல் / இணைய வங்கித்தொழில் வசதியை எனக்கு வழங்குவதற்கான எனது கோரிக்கையை ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுவதனைக் கருத்திற்கொண்டு, இந்நியதி நிபந்தனைகள் எனக்குத் தெளிவுபடுத்தப்பட்டு என்னால் விளங்கிக்கொள்ளப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என நான் இத்தால் உடன்படுகின்றேன். வங்கியின் மொபைல் / இணைய வங்கித்தொழில் வசதியை ஆளும் எல்லா நியதி நிபந்தனைகளுக்கும் அமைந்தொழுகுவதற்கு நான் உடன்படுகின்றேன். வங்கியினால் வழங்கப்படும் பாதுகாப்பு மற்றும் காப்பு அறிவுறுத்தல்களுக்கு நான் அமைந்தொழுகாவிடின் ஏற்படுகின்ற ஆபத்துக்களை முழுமையாக ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும் என நான் வெளிப்படுத்துகின்றேன். வங்கியானது எனது கோரிக்கையை ஏற்றுக்கொள்ளுதல் தொடர்பாக அல்லது அதிலிருந்து எழுகின்ற வழக்குகள், வழக்கு நடவடிக்கைகள், பொறுப்புக்கள் மற்றும் உரிமைக்கோரிக்கைகள், விடயங்கள், சேதங்கள், செலவுதொகைகள் மற்றும் செலவுகள் எல்லாவற்றுக்கும் எதிராக வங்கியை நட்டோத்தரவாதமளிக்கப்பட்டதாக வைத்திருப்பதற்கு நான் உடன்படுகின்றேன். எவரேனும் ஆளினால் பயனர் ID மற்றும் கடவுச்சொல்லின் அதிகாரமளிக்கப்படாத பயன்பாடு பற்றிய ஏதேனும் செயல் அல்லது எத்தனிப்பு அல்லது மூன்றாம் திறத்தவர் ஒருவரின் பயோமெட்ரிக்ஸ் ஊடாக மொபைல் பேங்கிங் செயலிக்கான அதிகாரமளிக்கப்படாத அணுகுகை பற்றிய ஏதேனும் செயல் அல்லது எத்தனிப்பு பற்றி எனக்கு அறியவந்தால் அதுபற்றி நான் உடனடியாக வங்கிக்கு அறிவித்தல் வேண்டும் என உறுதிப்படுத்துகின்றேன்.

15.2 வங்கியானது எனக்கான குறிப்பீடு இன்றி கணக்கு (கணக்குகள்) சம்பந்தமாக வேறு எவையேனும் வங்கிகள், கடன் தகவல் பணியகம் (CRIB) அல்லது தகவல்களைப் பெறுவதற்கு சட்டரீதியாக அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் மற்றும் எல்லா விசாரணைகளையும் அவ்வாறு தெரிவுசெய்தால் வங்கி அவற்றுக்குப் பதிலளிப்பதற்கும் அவற்றை

வழங்குவதற்கும் அதிகாரமளிக்கின்றேன். ஐயத்தைத் தவிர்ப்பதற்காக அத்தகைய ஏதேனும் பதில் வங்கிக்கான குறிப்பீடொன்றையும் உள்ளடக்கலாம்.

15.3 மேலேயுள்ள மொபைல் பேங்கிங் சேவை தொடர்பான நியதி நிபந்தனைகளை நான் வாசித்து, விளங்கிக்கொண்டு அவற்றினால் பிணிக்கப்படுவதற்கு உடன்படுகின்றேன் என இத்தால் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

தனிநபர் வாடிக்கையாளர்

…………………………………………	…………………………………………
பெயர்	தே.அ.அ
…………………………………………	…………………………………………
கையொப்பம்	திகதி